# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## கைத்தொழிற் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்)

**குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களின் ஏற்பாடுகளின்கீழ் எல்லாத் துடர்ச்சிகளையும் அல்லது குற்றவழக்குகளையும் கேட்பதற்கும், விளங்குவதற்கும், தீர்மானிப்பதற்கும் மற்றும் கையுதிர்ப்பதற்கும் மேலதிக நீதிவான்களாக தொழில் நியாயசபைகளின் தலைவர்களைக் கருதுவதற்கு விசேட ஏற்பாடுகளைச் செய்வதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்குமானதொரு சட்டமூலம்**

*பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் அவர்களால் 2022, ஏப்பிறல் மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2022, மாச்சு மாதம் 25 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ *114 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *18.00*** **தபாற் செலவு : ரூபா *15.00***

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*ச.வ.- ஓ. 22/2020*

**குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களின் ஏற்பாடுகளின்கீழ் எல்லாத் துடர்ச்சிகளையும் அல்லது குற்றவழக்கு களையும் கேட்பதற்கும், விளங்குவதற்கும், தீர்மானிப்ப தற்கும் மற்றும் கையுதிர்ப்பதற்கும் மேலதிக நீதிவான் களாக தொழில் நியாயசபைகளின் தலைவர்களைக் கருதுவதற்கு விசேட ஏற்பாடுகளைச் செய்வதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்குமானதொரு சட்டம்**.

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்*

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின்     ஆம் இலக்க, கைத்தொழிற் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாமென்பதுடன் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*தொழில் நியாய சபையின் தலைவர் மேலதிக நீதிவானொரு வராகக் கருதப்படுதல்*

**2.** (1) (131 ஆம் அத்தியாயமான) கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 31அ என்னும் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட தொழில் நியாயசபையின் தலைவர் ஒவ்வொருவரும், தொழில் நியாயசபை யின் தலைவரென்ற அவரது தத்துவங்களுடனும் கடமைகளுடனும் மேலதிகமாக, (131 ஆம் அத்தியாயமான) கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எவரேனும் நடுத்தீர்ப்பாளரினால் அல்லது கைத்தொழில் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் அளிப்பு அல்லது தொழில் நியாயசபையினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை அல்லது ஆணையாளரின் ஏதேனும் முடிபு அல்லது ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஒரு சான்றி தழின்மேல் கொடுப்பனவை அறவிடுதல் அல்லது (இச்சட்டத்தில் "குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்கள்" எனக் குறிப்பீடு செய்யப் படும்) இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட

சட்டவாக்கங்களின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துக்காக மேலதிக நீதிவானொருவராகவிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஒரு தொழில் நியாயசபையின் தலைவரினது நியாயாதிக்கம், (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, தொழில் நியாயசபை எந்த இடத்தில் அமைந்துள்ளதோ அந்த இடம், 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் எல்லைகுறிக்கப்படக்கூடியவாறான நீதிவான் நீதிமன்றமொன்றின் நீதிமுறைப் பிரிவொன்றுக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(3) இதற்கான அட்டவணை II இன் நிரல் I இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு தொழில் நியாயசபையின் தலைவரொருவரினது நியாயாதிக்கம், அவ் அட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட நீதிவான் நீதிமன்றத்தின் நீதிமுறைப் பிரிவுக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(4) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, நீதிவான் நீதிமன்றங்கள், அட்டவணை II இன் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட நீதிமுறைப் பிரிவு உட்பட நீதிவான் நீதிமன்றத்தின் ஏதேனும் நீதிமுறைப் பிரிவில், குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களில் குறித்துரைக்கப் பட்டவாறான அத்தகைய தத்துவங்களை பிரயோகித்தலை தொடருதல் வேண்டும் என இத்தால் பிரகடனம் செய்யப்படுகின்றது.

*1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டம் மற்றும் (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமை*

**3.** (1) ஒரு தொழில் நியாயசபையின் தலைவரொருவர் மேலதிக நீதிவானொருவராகச் செயலாற்றுமிடத்து, (131 ஆம் அத்தியாயமான) கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எவரேனும் நடுத்தீர்ப்பாளரினால் அல்லது கைத்தொழில் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் அளிப்பு அல்லது தொழில் நியாயசபையினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை அல்லது ஆணையாளரின் முடிபு அல்லது ஆணையாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றின்மேல் கொடுப்பனவை அறவிடுதல் அல்லது குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களின் ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துதல் தொடர்பாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின்

ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு சுருக்கமுறையொன்றில் வழக்குகளைக் கேட்பதற்கும், விளங்குவதற்கும், தீர்மானிப்பதற்கும் மற்றும் கையுதிர்ப்பதற்குமான தத்துவத்தையும் அதிகாரத்தையும் அத்தகைய தலைவர் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம் மற்றும் (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், தொழில் நியாயசபைக்கு முன்னருள்ள துடர்ச்சிகளை அல்லது குற்றவழக்குகளைக் கேட்பதற்கும், விளங்குவதற்கும், தீர்மானிப்பதற்கும் மற்றும் கையுதிர்ப்பதற்குமான நடவடிக்கைமுறைக்கும் அதுதொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்:

ஆயின், (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் தொழில் நியாயசபையினாலான (131 ஆம் அத்தியாய மான) தொழில் பிணக்குகள் சட்டத்தின் 31ஆ என்னும் பிரிவின் கீழான வழக்கு நடவடிக்கைகளின் நடாத்துகைக்கு ஏற்புடையன வாதலாகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை**

[பிரிவு 2(1)]

1 1981 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, பெருந்தோட்ட வேலையாளர்களுக்கான படிகள் சட்டம்

2. 1978 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (இல.2) சட்டம்

3. 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டம்

4. 2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டம்

5. 1978 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (இல.1) சட்டம்

6. (73 ஆம் அத்தியாயமான) சாரதிகளை ஒழுங்குபடுத்தல் கட்டளைச் சட்டம்

7. 1945 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, தொழிலாளர்களைக் கட்டுப்படுத்தல் (பதவிப்பெயர் மாற்றற்) கட்டளைச்சட்டம்

8. (225 ஆம் அத்தியாயமான) நோய்கள் (தொழிலாளர்கள்) கட்டளைச்சட்டம்

9. 1979 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஊழியர் பேரவைகள் சட்டம்

10. 1959 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஊழியர்கள் விடுமுறைநாட்கள் சட்டம்

11. 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டம்

12. 1975 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

13. 1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

14. 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்

15. 1978 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, பயிலுநர்களைத் தொழிலுக் கமர்த்துதல் (தனியார்துறைச்) சட்டம்

16. 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்கள், இளமாட்கள் மற்றும் சிறுவர்களைத் தொழிலுக்கமர்த்துதல் சட்டம்

17. (133 ஆம் அத்தியாயமான) தோட்டத்தொழிலாளர்கள் (இந்திய) கட்டளைச்சட்டம்

18. *1971 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தோட்டக் குடிமனைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

19. *(128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டம்*

20. *1978 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, எரிபொருள் பேணுகை ஐந்து நாள் வாரச் சட்டம்*

21. *1971 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விடுமுறைநாட்கள் சட்டம்*

22. *(132 ஆம் அத்தியாயமான) இந்தியக் குடிவரவுத் தொழிலாளர்கள் கட்டளைச்சட்டம்*

23. *(131 ஆம் அத்தியாயமான) கைத்தொழிற் பிணக்குகள் சட்டம்*

24. *1958 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, தொழிலாளர்களின் சோதனையாளர் (பதவிப்பெயர் மாற்றச்) சட்டம்*

25. *1968 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, ஊழியர்களின் இடைகாலப் பெறுமதிக் குறைப்புப் படிச் சட்டம்*

26. *1972 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, தொழிலாளர்களைச் சோதனைசெய்தல் (இரகசியம் பேணுதல்) சட்டம்*

27. *(140 ஆம் அத்தியாயமான) மகப்பேற்று நன்மைகள் கட்டளைச்சட்டம்*

28. *(233 ஆம் அத்தியாயமான) மருத்துவத் தேவைகள் கட்டளைச்சட்டம்*

29. *(130 ஆம் அத்தியாயமான) சுரங்கங்கள் (பெண் தொழிலாளர்கள் நிலத்துக்குக்கீழ் வேலைசெய்வதைத் தடைசெய்தல்) கட்டளைச் சட்டம்*

30. *1973 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, சுரங்கங்கள் மற்றும் கனிப் பொருட்கள் சட்டம்*

31. *(210 ஆம் அத்தியாயமான) சுரங்கங்கள், கற்குழிகள் மற்றும் கனிப் பொருட்கள் கட்டளைச்சட்டம்*

32. *2021 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வேலையாட்களின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதுச்சட்டம்*

33. *(135 ஆம் அத்தியாயமான) குறைந்தபட்ச வேதனங்கள் (இந்தியத் தொழிலாளர்கள்) கட்டளைச்சட்டம்*

34. *1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, தேசிய தொழிற்பயிற்சிச் சட்டம்*

35. *2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டம்*

36. *1978 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, தாய்நாட்டுக்குத் திரும்பும் இந்தியர்களுக்கான பணிக்கொடைகள் மற்றும் வேறு பணவகையான நன்மைகளைக் கொடுப்பனவுசெய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

37. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம்

38. 1976 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிறப்புரிமை லீவு (தனியார்) சட்டம்

39. (137 ஆம் அத்தியாயமான) வீட்டு வேலைக்காரர்களைப் பதிவு செய்தல் கட்டளைச்சட்டம்

40. (72 ஆம் அத்தியாயமான) சேவை ஒப்பந்தங்கள் கட்டளைச்சட்டம்

41. (129 ஆம் அத்தியாயமான) கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் (தொழிலையும் மற்றும் ஊதியத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டம்

42. 1978 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, வேலையாளர்களின் விசேட படிகள் சட்டம்

43. 1979 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க, வேலையாளர்களின் குறைநிரப்புப் படிகள் சட்டம்

44. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்துதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

45. (138 ஆம் அத்தியாயமான) தொழிற்சங்கக் கட்டளைச்சட்டம்

46. 1970 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, தொழிற்சங்கப் பிரதிநிதிகள் (தோட்டங்களினுட் பிரவேசித்தல்) சட்டம்

47. (134 ஆம் அத்தியாயமான) துண்டுத் தடைசெய்தல் கட்டளைச்சட்டம்

48. (136 ஆம் அத்தியாயமான) சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்

49. (139 ஆம் அத்தியாயமான) வேலையாட்கள் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டம்

**அட்டவணை II**

[*பிரிவு 2 (3)*]

| இல. | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| | **தொழில் நியாயசபை** | **நீதிவான் நீதிமன்றத்தின் இயைபான நியாயாதிக்கம்** |
| *1.* | தொழில் நியாயசபை இல. *1* | பிரதான நீதிவான் நீதிமன்றம், கொழும்பு *12* |
| *2.* | தொழில் நியாயசபை இல. *2* | பிரதான நீதிவான் நீதிமன்றம், கொழும்பு *12* |
| *3.* | தொழில் நியாயசபை இல. *8* | பிரதான நீதிவான் நீதிமன்றம், கொழும்பு *12* |
| *4.* | தொழில் நியாயசபை இல. *13* | பிரதான நீதிவான் நீதிமன்றம், கொழும்பு *12* |
| *5.* | தொழில் நியாயசபை இல. *33*, மஹரகம | நீதிவான் நீதிமன்றம், ஹோமாகம |
| *6.* | தொழில் நியாயசபை இல. *32*, இரத்மலானை | நீதிவான் நீதிமன்றம், கல்கிஸ்ஸை |
| *7.* | தொழில் நியாயசபை இல. *1*/ மேலதிக மற்றும் இல. *2*/ மேலதிக, பத்தரமுல்ல | நீதிவான் நீதிமன்றம், கடுவெல |
| *8.* | தொழில் நியாயசபை இல. *30*, கடுவெல | நீதிவான் நீதிமன்றம், கடுவெல |
| *9.* | தொழில் நியாயசபை இல. *19*, அவிசாவெல்ல | நீதிவான் நீதிமன்றம், அவிசாவெல்ல |
| *10.* | தொழில் நியாயசபை இல. *24*, கம்பஹா | நீதிவான் நீதிமன்றம், கம்பஹா |
| *11.* | தொழில் நியாயசபை இல. *31*, வத்தளை | நீதிவான் நீதிமன்றம், வத்தளை |
| *12.* | தொழில் நியாயசபை இல. *21*, நீர்கொழும்பு மற்றும் இல. *21*/ மேலதிக, நீர்கொழும்பு | நீதிவான் நீதிமன்றம், நீர்கொழும்பு |
| *13.* | தொழில் நியாயசபை இல. *25*, பாணந்துறை | நீதிவான் நீதிமன்றம், பாணந்துறை |

| | | |
|---|---|---|
| 14. | தொழில் நியாயசபை இல. 18, களுத்துறை | நீதிவான் நீதிமன்றம், களுத்துறை |
| 15. | தொழில் நியாயசபை இல. 04, காலி | நீதிவான் நீதிமன்றம், காலி |
| 16. | தொழில் நியாயசபை இல. 26, மாத்தறை | நீதிவான் நீதிமன்றம், மாத்தறை |
| 17. | தொழில் நியாயசபை இல. 34, கொட்டபொல | நீதிவான் நீதிமன்றம், மொறவக்க |
| 18. | தொழில் நியாயசபை இல. 03, கண்டி | நீதிவான் நீதிமன்றம், கண்டி |
| 19. | தொழில் நியாயசபை இல. 39, பலபத்வல | நீதிவான் நீதிமன்றம், மாத்தளை |
| 20. | தொழில் நியாயசபை இல. 38, நாவலப்பிட்டி | நீதிவான் நீதிமன்றம், நாவலப்பிட்டி |
| 21. | தொழில் நியாயசபை இல. 37, தலவாக்கெல | நீதிவான் நீதிமன்றம், தலவாக்கெல |
| 22. | தொழில் நியாயசபை இல. 10, ஹட்டன் | நீதிவான் நீதிமன்றம், ஹட்டன் |
| 23. | தொழில் நியாயசபை இல. 09, நுவரேலியா | நீதிவான் நீதிமன்றம், நுவரேலியா |
| 24. | தொழில் நியாயசபை இல. 05, பதுளை | நீதிவான் நீதிமன்றம், பதுளை |
| 25. | தொழில் நியாயசபை இல. 36, பண்டாரவெல | நீதிவான் நீதிமன்றம், பண்டாரவெல |
| 26. | தொழில் நியாயசபை இல. 44, அம்பாறை | நீதிவான் நீதிமன்றம், அம்பாறை |
| 27. | தொழில் நியாயசபை இல. 06, (R) இரத்தினபுரி | நீதிவான் நீதிமன்றம், இரத்தினபுரி |
| 28. | தொழில் நியாயசபை இல. 40, பலாங்கொட | நீதிவான் நீதிமன்றம், பலாங்கொட |
| 29. | தொழில் நியாயசபை இல. 06(E), எம்பிலிபிட்டி | நீதிவான் நீதிமன்றம், எம்பிலிபிட்டி |
| 30. | தொழில் நியாயசபை இல. 42, கேகல்லை | நீதிவான் நீதிமன்றம், கேகல்லை |
| 31. | தொழில் நியாயசபை இல. 23, குருநாகல் | நீதிவான் நீதிமன்றம், குருநாகல் |

| | | |
|---|---|---|
| 32. | தொழில் நியாயசபை இல. 46, குளியாப்பிட்டி | நீதிவான் நீதிமன்றம், குளியாப்பிட்டி |
| 33. | தொழில் நியாயசபை இல. 28, சிலாபம் | நீதிவான் நீதிமன்றம், சிலாபம் |
| 34. | தொழில் நியாயசபை இல. 27, அநுராதபுரம் | நீதிவான் நீதிமன்றம், அநுராதபுரம் |
| 35. | தொழில் நியாயசபை, திருகோணமலை | நீதிவான் நீதிமன்றம், திருகோணமலை |
| 36. | தொழில் நியாயசபை இல. 22, மட்டக்களப்பு | நீதிவான் நீதிமன்றம், மட்டக்களப்பு |
| 37. | தொழில் நியாயசபை, யாழ்ப்பாணம் | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம் |